**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.164/2023**
**வழக்கு சாட்சி PW – 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆக்னஸ் ராணி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 16th, 2024.

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. மற்ற எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் பணிபுரியும் வள்ளியூருக்கு திருநெல்வேலி வரை பேருந்திலும், திருநெல்வேலியிலிருந்து கேம்ப் இருந்தால் ஜீப்பிலும், இல்லையென்றால் பேருந்திலும் பணிக்கு செல்வேன். நான் புகார் மனுவில், நான் வேலைக்கு எதன் மூலம் செல்வேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் சம்பவத்தினத்தன்று வள்ளியூரில் தான் இருந்தேன் என்றும், நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டது போல், வள்ளியூரிலிருந்து ஊருக்கு வந்திருந்தால், அதற்கான பயணச்சீட்டை விசாரணை அதிகாரியிடம் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் கண்காணிப்பு பொறியாளர் ஆசைத்தம்பியின் பணிநிறைவு பாராட்டு விழாவில் கலந்து கொண்டு, வீட்டிற்கு வந்தேன் என்ற விபரத்தை நான் புகார் மனுவிலோ, வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நகைகள் வைக்கப்பட்டிருந்த மரப்பெட்டிக்கு பூட்டுச் சாவி உண்டு.

மரப்பெட்டியிலிருந்த நகைகளின் எடை எனக்கு தோராயமாகத் தான் தெரியும். அவை அவ்வப்போது வாங்கியது. நான் நகை வாங்கியதற்கான ரசீதுகளை புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுக்கவில்லை என்றால் சம்பவத்திற்கு கொஞ்ச நாட்களுக்கு முன்பு வாங்கிய நகைக்கான இரசீதை மட்டும் புலன் விசாரணை அதிகாரியிடம் காண்பித்தேன். அந்த இரசீது தற்போது என்னிடம் உள்ளது. நான் அவ்வாறு ரசீதை புலன் விசாரணை அதிகாரியிடம் காண்பித்திருந்தால் அதை இந்த வழக்கில் ஒரு ஆவணமாக புலன் விசாரணை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. நாங்கள் இவ்வளவு நகைகளை வங்கி பாதுகாப்பு பெட்டகத்தில் வைப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனது தகப்பனார் இது கிராமம் என்பதினால் பயம் இல்லை என்று கூறியதன் அடிப்படையில் நகைகளை வங்கி லாக்கரில் வைப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. காணாமல் போன ரூபாய் பத்து இலட்சம் எனது தகப்பனார் வங்கியிலிருந்து எடுத்தது. வங்கியிலிருந்து அந்த பணத்தை எடுத்ததற்கான இரசீதை காவல் ஆய்வாளர் விசாரிக்கும்போது கொடுத்தோம். அந்த பணம் எதற்காக வங்கியிலிருந்து எடுக்கப்பட்டது என்ற விபரத்தை நான் புகாரில் கூறவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் பத்து இலட்சம் ரூபாய் பணம் வங்கியிலிருந்து எடுத்து வீட்டில் வைத்திருந்தார் என்று நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. இந்த பணம் எடுக்கப்பட்டதற்கான காரணத்தை நான் போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டேன். எனது அப்பா வருமான வரி செலுத்தக்கூடிய நபரில்லை. அவர் ஓய்வு ஊதியதாரர். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். நான் புகாரில் ரூபாய் பத்து இலட்சம் ரூபாய் நோட்டுக்களுக்கான டினாமினேசன் குறித்து கூறவில்லை என்றால் சரிதான். எனது அப்பா பணம் பெட்டியில்

இருந்தது என்று கூறியதன் அடிப்படையில் தான் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் மனுவில் அடையாளம் தெரியாத நபர்கள் என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் வீட்டிற்கு வந்தவர்களின் அங்க அடையாளம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வீட்டிற்கு வந்தவர்கள் மங்கி கேப் அணிந்திருந்ததினால் அவர்கள் அடையாளம் தெரியவில்லை. வந்திருந்தவர்கள் மங்கி கேப் அணிந்திருந்ததாக நான் புகாரிலோ, வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வீட்டிற்குள் வந்த 3 நபர்களை பார்த்தால் அடையாளம் காட்டலாம் என்று எனது தகப்பனார் கூறியதாக நான் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கைப்பேசி மூலமாக உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் காயம்பட்ட எனது பெற்றோர்களை கவனித்து கொண்டிருந்தேன். பிரகாஷ் என்கிற பையன் தான் காவல்துறையினருக்கு தகவல் கொடுத்தான். 1ம் எதிரி எங்கள் வீட்டோடு சேர்ந்த கடையை வாடகைக்கு எடுத்து வெல்டிங் பட்டறை வைத்திருந்தார் என்றால் சரிதான். எனது பெற்றோரை எங்கள் வீட்டிற்கு எதிர்த்தாற் போல் உள்ள சி.ஜே. மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். மருத்துவரிடம் எனது பெற்றோர்கள் எத்தனை மணிக்கு, எப்போது சம்பவம் நடந்தது என்று குறிப்பிட்டார்களா? என்றால் எனது தாயார் மயக்க நிலையில் இருந்தார். எனது தகப்பனார் படப்படப்புடன் காணப்பட்டார். அதனால் சம்பவத்தை பற்றி அவர்கள் மருத்துவரிடம் கூறவில்லை. எங்கள் வீட்டிலிருந்து மருத்துவமனை 10-15 மீட்டர் இருக்கும். சம்பவத்தன்று இரவு 10.00 அல்லது 10.30 மணிக்குத் தான் நான் வீட்டிற்கு வந்ததாக முதல்

விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் புகார்மனுவில் இரவு 10.00 மணிக்கு வீட்டிற்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் வீட்டிற்கு வந்து 03.00 – 03.30 மணி கழித்து தான் எனது பெற்றோரை மருத்துவமனையில் அனுமதித்தோம் என்றால் எனக்கு நேரம் சரியாக நியாபகமில்லை. அதற்கு முன்பாகவே மருத்துவர் வந்து முதலுதவி கொடுத்தார். அவ்வாறு மருத்துவர் வந்தது பற்றி நான் போலீசாரிடம் கூறியுள்ளேன். சம்பவம் நடந்த அன்றே நிறைய போலீசார் என்னை விசாரித்தார்கள். யார், யாரென்று எனக்கு தெரியாது. அடுத்த நாள் நான் கூறிய விபரங்களை டைரியில் போலீசார் குறித்து கொண்டார்கள். நான் 30.06.2022ம் தேதி வீட்டிற்கு வரவில்லை என்றாலும், நான் எனது பெற்றோரை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றாலும், இந்த சம்பவம் பற்றி எனது தகப்பனார் என்னிடம் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் அன்றைய தினம் வீட்டிற்கு வந்திருந்திருந்தால் சம்பவம் குறித்து உடனடியாக புகார் கொடுத்திருப்பேன் என்றும், நான் காலதாமதமாக புகார் கொடுத்திருப்பது நான் அன்றைய தினம் வீட்டில் இல்லை என்பதினால் தான் என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் போலீசார் மற்றும் மோப்ப நாய் வரும்போது உடனிருந்தேன். விசாரிக்க, விசாரிக்க பதில்கள் சொல்லிக்கொண்டிருந்தேன். அதனால் அடுத்த நாள் 10.00 மணிக்கு புகார் கொடுத்தேன். நான் புகார் மனுவில் காலதாமதத்திற்கான மேற்கண்ட காரணத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் நான் சொல்லியுள்ள நகைகளும், போலீசார் என்னிடம் அடையாளம் காட்டிய நகைகளும் ஒன்று இல்லை என்றால் சரியல்ல. அவைகளை நான் சரிபார்த்து தான் அடையாளம் காட்டினேன். சம்பவத்திற்கு முன்பாக அந்த நகைகளுக்கான புகைப்படங்கள் எதுவும்

என்னிடம் இருக்கவில்லை என்றால் சரிதான். நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் குறிப்பிட்ட நகைகளின் எடைக்கும், போலீசார் கைப்பற்றியதாக கூறப்படும் நகைகளின் எடைக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். நிறைய நகைகள் உடைந்த நிலையில் காணப்பட்டது. அதனால் இந்த வேறுபாடு ஏற்பட்டது. நகைகள் உடைந்த நிலையில் இருப்பதினால், அவைகளை ஆட்சேபனையுடன் பெற்று செல்கிறேன் என்று நான் நீதிமன்றத்தில் எழுதிக் கொடுத்து விட்டு, நகைகளை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். ஒரு மோதிரத்தில் எனது தம்பியின் பெயரின் சுருக்கெழுத்தான AK என்று எழுதப்பட்டிருக்கும் என்றும், அதுபோல் இன்னொரு மோதிரத்தில் எனது அப்பா பெயரான அருணாச்சலம் என்று எழுதப்பட்டிருக்கும் என்றும், நான் புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். பிரகாஷ் என்பவர் எனது அப்பாவிடம் அடகு வைத்திருந்த நகையை காணவில்லை என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நகையை பிரகாஷ் எனது அப்பாவிடம் அடகு வைத்திருந்தார் என்பதற்கு எனது அப்பா கைப்பட எந்த இரசீதும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாகத் தான் வாங்கிய இரண்டு இலட்ச ரூபாய் பணத்திற்கு ஈடாக அந்த நகையை வைத்திருந்தார். அவ்வாறு பிரகாஷ் ரூபாய் இலட்சத்திற்கு ஈடாக நகையை அடமானமாக கொடுத்திருந்தார் என்று நான் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வீட்டில் உதவி செய்பவர்களுக்கு கைமாற்றாகத் தான் பணத்தை கொடுப்பார்களே தவிர, அதற்கு ஈடாக நகையை வாங்கிக்கொண்டு பணத்தை கொடுக்க மாட்டார்கள் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் மனுவானது 3 பக்கங்களை கொண்டது என்றால் எனக்கு நியாபகமில்லை. புகார் எந்த அடித்தல், திருத்தலும் இல்லாமல்

எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதலில் Rough ஆக எழுதிவிட்டு, பிறகு இந்த புகாரை எழுதினேன். நான் புகாரை எழுவதற்கு இரண்டு – இரண்டரை மணி வரை ஆகியிருக்கும். நான் இந்த புகாரை எழுதி முடிப்பதற்கான இரண்டரை மணி நேரம் கழித்து தான் புகார் கொடுத்தேன் என்றால் எனக்கு நேரம் சரியாக நியாபகமில்லை. நான் புகார் ஒரு மணி நேரம் கழித்து கொடுத்திருப்பேன் என்றால் சரிதான். நான் புகார் மனு கொடுக்கும் போது, காவல் நிலையத்தில் எந்தெந்த அதிகாரிகள் இருந்தார்கள் என்று அவர்களது பெயரை என்னால் கூறமுடியாது. என்னை சம்பவம் நடந்த அன்று வீட்டில் வைத்து விசாரித்தார்கள். நான் புகார் கொடுக்கும் போது, போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் புகார் கொடுத்த பிறகு, மருத்துவமனைக்கு சென்று, போலீசார் எனது அம்மா, அப்பாவை சென்று பார்த்தார்கள். அவர்கள் பேச முடியாத நிலையில் இருந்ததினால், திரும்பி வந்தார்கள். புகார் கொடுத்த பிறகு, போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் அதற்கு பிறகும் அடிக்கடி போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள். என்னிடம் உங்களுக்கு யார் மேலயாவது சந்தேகம் இருக்கிறதா? என்று கேட்பார்கள். யார், யார் விசாரித்தார்கள் என்று எனக்கு அவர்களது பெயர் மற்றும் பதவி தெரியாது. குற்றப்பிரிவில் இருந்து வந்திருப்பதாக கூறினார்கள். இரண்டு நாட்கள் கழித்து திண்டுக்கல் குற்றப்பிரிவில் வந்து விசாரித்து, வீட்டை முழுவதுமாக சோதனையிட்டார்கள். நாங்கள் யாரையும் பெயர் குறிப்பிட்டு சந்தேகம் இருப்பதாக போலீசாரிடம் கூறவில்லை. என்னிடம் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வரும் நபர்களின் பெயர்கள் கேட்டார்கள். நான் பிரகாஷ் பெயரையும், மாரியப்பன் பெயரையும் கூறினேன். நான் புகார் மனுவிலோ, போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திலோ பிரகாஷிம், மாரியப்பனும்

எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவார்கள் என்ற விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் புகாரில் குறிப்பிடவில்லை, ஆனால் போலீசாரிடம் கூறினேன். நான் சந்தேக நபர்களை போலீசாரிடம் தெரிவித்திருந்தால், அவர்கள் அதையும் சேர்த்து எழுதியிருப்பார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. என்னை விசாரித்த 01.07.2022ம் தேதியன்று நான் வேறு எங்கும் செல்லவில்லை. என்னை விசாரித்ததை போலீசார் அப்படியே எழுதிக்கொண்டார்கள் என்றால் போலீசார் டைரியில் குறித்து கொண்டார்கள். அவர்கள் என்ன குறித்து கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. உடைக்கப்பட்டதாக கூறப்படும் மரப்பெட்டியை போலீசார் எடுத்து செல்லவில்லை. சாட்சி அரிச்சந்திரன் எனது பெரியப்பா மகன். சாட்சி பூசைத்துரை எனது சித்தப்பா மகன். சாட்சிகளுக்கு எனது தம்பி கார்த்திகேயன் தகவல் கூறினார். எங்கள் வீட்டிற்கு அருகே ஆத்தியப்பன் வீடு, முருகன் டீக்கடை, முருகன் பலசரக்கு கடை, டேவிட் வீடு, மணிமாறன் வழக்கறிஞர் அலுவலகம், கனகராஜ் சாக்கு கடை ஆகியவை உள்ளது என்றால் ஆத்தியப்பன் வீடு மற்றும் பலசரக்கு கடை எங்கள் வீட்டை ஒட்டி இல்லை. மேலே குறிப்பிட்ட மீதி கடைகள் மற்றும் அலுவலகம் உள்ளது. எனது தகப்பனார் ஓய்வு பெற்ற ஆசிரியர். எனது தாயாரும் ஓய்வு பெற்ற ஆசிரியர். எனது அப்பாவின் தூண்டுதலின் பேரில் 1வது எதிரி இந்த வழக்கில் சேர்த்துக்கொள்ளப்பட்டார் என்றால் சரியல்ல. ஆத்தியப்பன் வீடு மற்றும் முருகன் பலசரக்கு கடை இல்லை என்று கூறுவது நான் சம்பவயிடத்தில் குடியிருக்கவில்லை என்பதை காட்டுகிறது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், புகாரானது கால பிற்பாடாக, பின்யோசனை செய்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

சம்பவத்தினத்தன்று நான் வீட்டிற்கு வரவில்லை என்றாலும், எனது பெற்றோரை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவர் வீட்டிற்கு வந்து எனது பெற்றோருக்கு சிகிச்சை அளித்த விபரத்தை போலீசார் விசாரணையின் போது கூறினேன் என்றால் கூறினேன். சாமி போட்டோவின் முன்பிருந்த 7 பவுண் தாலிச்செயின் சம்பந்தமாக புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த பிறகு தான் அதை கவனித்தோம். நான் சாமி போட்டோவின் முன்பிருந்த 7 பவுண் தாலிச்செயின் பற்றி காவல் நிலையத்தில் தகவல் கூறினேன். 26.07.2022ம் தேதி நான் நீதிமன்றத்திலிருந்து நகைகளை பெற்றுக்கொண்டேன். அதற்கு 2 நாட்களுக்கு முன்பாக காவல் நிலையத்திற்கு சென்று நான் நகைகளை அடையாளம் காட்டினேன். கடையை காலி செய்ய வேண்டும் என்று சொன்னதினால், பழி வாங்குவதற்காகத் தான் மாரியப்பன் இவ்வாறு செய்தார் என்று முதல் விசாரணையில் கூறியதை நான் புகாரிலோ, வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். அவர் அப்போது இந்த சம்பவத்தில் ஈடுபட்டது தெரியாததினால், நான் அது பற்றி கூறவில்லை. நான் மாரியப்பனை பழிவாங்க வேண்டும் என்பதற்காக அவருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நகைகளை நான் பெற்றுக்கொண்டது சம்பந்தமாக போலீசாரிடம் நான் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் நகைகளை பெற்றுக்கொண்ட பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சம்பவம் நடந்த அன்று இரவு வரவில்லை என்றால் எனது அப்பா, அம்மாவை காப்பாற்றியிருக்க முடியாது. நான் சம்பவம் நடந்தவுடனேயே வந்திருந்தால் உடனடியாக

எனது பெற்றோரை மருத்துவமனையில் அனுமதித்திருப்பேன் என்றும், அதுபோல் புகாரும் உடனடியாக கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் 1ம் எதிரியை பழிவாங்க வேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எனக்கு அவ்வாறு எந்த நோக்கமும் கிடையாது. நான் எனது பெற்றோரது இரத்தத்தை துடைத்த துணியை காவல்துறையினரிடம் கொடுத்து விட்டேன்.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.